# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2421/54 - 2025 පෙබරවාරි මස 01 වැනි සෙනසුරාදා - 2025.02.01

*2421/54 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 1/2009* (ii)

***1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, நெற்சந்தைப்படுத்தல் சபைச் சட்டம் 61 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளை***

*1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, நெற்சந்தைப்படுத்தல் சபைச் சட்டம் நெல் மற்றும் அரிசியின் கொள்வனவாளராக, விற்பனையாளராக, வழங்குநராக, விநியோகிப்பவராக, உமிநீக்குபவராக, ஆலை உரிமையாளராக அல்லது பதனிடுபவராக தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு (இதனகத்துப் பின்னர் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) நெற்சந்தைப்படுத்தல் சபையைத் தாபிப்பதற்கான ஏற்பாடுகளை செய்கின்றதுடன் நெல் மற்றும் அரிசியின் இருப்புத் தொகுத்தலை ஒழுங்குபடுத்துவதற்கு ஏற்பாடு எதனையும் செய்யாதிருக்கின்றதாதலாலும் :*

*அத்துடன் 1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, நெற்சந்தைப்படுத்தல் சபைச் சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளை பயனுற பிரயோகிக்கும், புரியும் மற்றும் நிறைவேற்றும் நோக்கத்துக்காக, நெல்லின் இருப்புத்தொகுத்தலை ஒழுங்குபடுத்துவதற்கு சபையை இயலச் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்தல் தேவையாகவுள்ளதாதலாலும் :*

*ஆகவே இப்பொழுது, 1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, நெற்சந்தைப்படுத்தல் சபைச் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே டொன் லால் காந்த ஆகிய நான், இக்கட்டளைமூலம் பின்வருமாறு பணிக்கின்றேன் :-*


1A- PG 7016 - 204 (02/2025)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(அ) இக்கட்டளை நடைமுறைக்கு வரும் தேதியன்று ஏதேனும் பண்டகசாலையில், குதிரில், களஞ்சியத்தில், கொள்கலனில் அல்லது வேறேதேனும் இடத்தில் ஏதேனும் நெல்லை தனது உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற அல்லது இக்கட்டளை நடைமுறைக்கு வரும் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின்கீழ் 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆம் திகதிய 2231/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 79 ஆம் இலக்க விசேட பணிப்பின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுள்ள எவரேனும் ஆள் அல்லது இக்கட்டளை நடைமுறைக்குவரும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் நெல்லின் இருப்புத்தொகுத்தலை கொண்டு நடாத்துவதற்கு உட்கருதுகின்ற எவரேனும் ஆள், இக்கட்டளை நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குப் பிந்தாமல், நெல்லின் இருப்புத்தொகுத்தல் என்ற தொழிலை கொண்டு நடாத்துவதற்கு சபையுடன் பதிவு செய்தல் வேண்டுமெனவும் ;

ஆயின் எவ்வாறாயினும், இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகள் தமது சொந்த பயிர்ச்செய்கையிலிருந்து நெல் இருப்பை வைத்திருக்கின்றவரான நெல்லின் உற்பத்தியாளரொருவருக்கு ஏற்புடையதாதலாகாது ;

ஆயின், மேலும், தமது சொந்தப் பயிர்ச்செய்கையிலிருந்து நெல் இருப்பை வைத்திருக்கின்றவரான நெல் உற்பத்தியாளரொருவர் சபையினால் தேவைப்படுத்துகின்றவாறும் தேவைப்படும்போதும், எந்த இடப்பரப்பில் நெல் பியர்ச்செய்யப்படுகின்றதோ அந்த இடப்பரப்பு, பயிர்செய்யப்பட்ட நெல்லின் வகை மற்றும் அவரது உடைமையில் அல்லது கட்டுக்காப்பிலுள்ள நெல் இருப்பின் தொகை என்பன தொடர்பான அத்தகைய தகவல்களை சபைக்கு வழங்குதல் வேண்டும் ;

(ஆ) பந்தி (அ) வின்கீழ் பதிவு செய்வதற்கு உட்கருதுகின்ற எவரேனும் ஆள் விண்ணப்பப்படிவத்தில் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்டதான படிவத்தில் சபைக்கு விண்ணப்பமொன்றை செய்தல் வேண்டுமென்பதுடன் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறான இருப்புக்கொள்ளளவின் அடிப்படையின்மீது தீர்மானிக்கப்படும் கட்டணமொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டுமெனவும் ;

(இ) சபை அனுமதிப்பத்திரமொன்றுக்கான விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன் மேலும் மற்றும் விண்ணப்பதாரரின் தகைமைகளுடன் திருப்திப்படுகின்றதன் மீதும் அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்டதான படிவத்தில் அனுமதிப்பத்திரத்தை வழங்கலாம். அத்தகைய அனுமதிப்பத்திரம் அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைந்ததாதல் வேண்டுமென்பதுடன் சபையினால் முன்னரே இல்லாதாக்கப்பட்டாலொழிய, வழங்குகைத் தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதியொன்றுக்கு செல்லுபடியாதல் வேண்டுமெனவும்;

(ஈ) சபை அனுமதிப்பத்திரமொன்றை வழங்கவதற்கு மறுக்குமிடத்து, சபை அத்தகைய மறுப்புக்கான காரணங்களை விண்ணப்பதாரருக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் அனுமதிப்பத்திரக் கட்டணத்தை விண்ணப்பகாரருக்கு மீளளிக்கப்படுவதற்குச் செய்வித்தல் வேண்டுமெனவும்;

(உ) பந்தி (இ) இன் கீழ் அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்ட எவரேனும் ஆள் நெல்லின் இருப்புத்தொகுத்தல் கொண்டு நடாத்தப்படுகின்ற ஏதேனும் பண்டகசாலை, குதிர், களஞ்சியம், கொள்கலன் அல்லது வேறு ஏதேனும் இடத்தினுள் பிரவேசிப்பதற்கு பகலில் ஏதேனும் நியாயமான நேரத்தில் சபையின் தவிசாளரை அல்லது தவிசாளரினால் அதிகார மளிக்கப்பட்ட சபையின் எவரேனும் அலுவலரை வசதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் நெற்சேகரிப்புப் பற்றிய பதிவேடுகள், கணக்குகள் மற்றும் ஏனைய ஆவணங்களையும் சோதிப்பதற்கு அனுமதித்தல் வேண்டும். அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்ட அத்தகைய ஆள் அவசியமானவிடத்து, அத்தகைய ஆவணங்களின் பிரதிகள் அல்லது பிரித்தெடுத்த பகுதிகளை அத்தகைய அலுவலர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

குரகமகே டொன் லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

பத்தரமுல்ல,
*2025, சனவரி 31.*

**அட்டவணை I**

**நெல்லை இருப்புத் தொகுத்தலுக்கான அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம்**

* அவசியமற்ற சொற்களை கீறிவிடுக

| | |
|---|---|
| கொடுப்பனவு செலுத்தப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு இலக்கம் | |
| செலுத்தப்பட்ட தொகை (ரூ.) | |

**அ. அடிப்படைத் தகவல்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | **விண்ணப்பதாரரின் முழுப்பெயர்** | | | |
| | சிங்களத்தில்/தமிழில் | | | |
| | ஆங்கிலத்தில் | | | |
| | விண்ணப்பதாரரின் முகவரி | | | |
| | தேசிய அடையாள அட்டை இலக்கம் | | | |
| | தொலைபேசி இலக்கம் | | தொலைநகல் இலக்கம் : | மின்னஞ்சல் முகவரி : |
| | கையடக்கத் தொலைபேசி | | | |
| | நிலையான தொலைபேசி | | | |
| 2. | **தொழிலின் தன்மை (இயைபான கூட்டினுள் 'X' என்னும் அடையாளத்தை இடுக)** | | | |
| | (அ) தனிப்பட்ட தொழில் | | (ஆ) பங்காண்மை | |
| | (இ) கம்பனி | | (ஈ) கூட்டுறவு சங்கக்கடை | |
| | (உ) கமக்காரர் அமைப்பு | | (ஊ) பகிரங்க நிறுவனம் | |
| | (எ) ஏனையவை | | | |

**ஆ. தொழில் பற்றிய தகவல்கள்**

| | | |
|---|---|---|
| 3. | (அ) தொழிலின் பெயர் | |
| | (ஆ) தொழிலின் பதிவிலக்கம் | |
| 4. | (அ) நெல் இருப்புத்தொகுத்தலை கொண்டு நடாத்தப்படுமிடத்து, வளவுகளின் சொந்தக்காரர் (கள்) என்போரின் பெயர் (கள்) | |
| | (ஆ) நெல் இருப்புத்தெகுத்தலுக்கான வளவு குத்தகை அடிப்படையின்மீது பெறப்பட்டிருப்பின் (குத்தகை உடன் படிக்கைகளின் பிரதிகளை இணைக்க) | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. | **விண்ணப்பதாரர் எந்த கொள்ளளவில் நெல் இருப்புத்தொகுத்தலை கொண்டு நடாத்துகின்றார்கள் ? (இயைபான கூட்டினுள் 'X' என்னும் அடையாளத்தை இடுக)** | | | | |
| | (அ) சேகரிப்பாளர் | | | (ஆ) களஞ்சியப்படுத்தி வைப்பவர் | |
| | (இ) விநியோகிப்பவர்/இடப்பெயர்ப்பவர் | | | (ஈ) தரகர் | |
| | (உ) நெற் கொள்வனவாளர் | | | (ஊ) ஆலை உரிமையாளர்/பதனிடுபவர் | |
| | (எ) மொத்த விற்பனையாளர் | | | (ஏ) ஏனையவை - தயவுசெய்து குறிப்பிடுக | |

**இ. நெல் இருப்புத்தொகுத்தலுக்காக அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்வதற்காக உத்தேசிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களினால் பூரணப்படுத்தப்படவேண்டிய தகவல்கள்**

| | | | |
|---|---|---|---|
| 6. | **நெல் இருப்புத்தொகுத்தல் கொண்டு நடாத்தப்படுகின்ற வளவுகள் தொடர்பிலான தகவல்கள்** | | |
| | *(அ) நெல் இருப்புத்தொகுத்தல் முறை* | *அளவு* | *மொத்த கொள்ளளவு (மெ. தொ.)* |
| | கட்டிடம் | | |
| | குதிர் | | |
| | கொள்கலன் | | |
| | பண்டகசாலை | | |
| | ஏனையவை | | |
| | (ஆ) வளவுகளின் முகவரி | | |
| | தொலைபேசி இலக்கம் | | வரிமதிப்பீட்டு இலக்கம் |
| | கிராம உத்தியோகத்தர் பிரிவு | | பி. செ. பிரிவு |
| | மாவட்டம் | | |
| | (ஆ) நெல் இருப்புத்தொகுத்தல் கொண்டு நடாத்தப்படுகின்ற வளவுகளுக்கு அண்மையிலுள்ள நகரத்தின் பெயர் இயைபான வளவுகள் மற்றும் போக்குவரத்து மார்க்கத்துக்கு நகரத்திலிருந்தான தூரம் (கிலோமீற்றர்களில்) | | |

| | | |
|---|---|---|
| 7. | **நெல் இருப்புத்தொகுத்தல் ஒரு கட்டிடத்தினுள் கொண்டு நடாத்தப்படின், கட்டிடத்தின் குறித்துரைப்பு** | |
| | களஞ்சியத்தின் கொள்ளளவு (மெ. தொ.) | |
| | நிலப்பரப்பு (மீற்றர்$^2$) | |
| | நில மட்டத்திலிருந்து பண்டகசாலை தளத்தின் உயரம் (செ. மீ.) | |
| | பக்கச் சுவர்களின் சராசரி உயரம் (மீற்றர்) | |
| | **பின்வரும் விடயங்கள் தொடர்பில் சரியான தகவலின் கீழ் கோடிடுக. வேறேதேனும் இருப்பின், தயவுசெய்து குறித்துரைக்க** | |
| | பண்டகசாலை தளம் நிர்மாணிக்கப்பட்டிருப்பது (சீமெந்தினால்/தளவோடுகளினால்/ஏனைய) | |
| | சுவர்கள் நிர்மாணிக்கப்பட்டிருப்பது (சீமெந்தினால்/மெல்லிய தகடுகளினால்/ஏனையவை) | |

| | | |
|---|---|---|
| | கூரை நிர்மாணிக்கப்பட்டிருப்பது (ஓடுகளினால்/ அஸ்பெஸ்ட்டோஸ் தகடுகளினால்/ஏனையவை) | |
| | நுழைவாயில் கதவுகளின் எண்ணிக்கை | |
| | பண்டக சாலையினுள் லொறிகள் நுழையலாம்/நுழைய முடியாது | |
| | பண்டகசாலை கட்டப்பட்ட ஆண்டு | |
| | பண்டகசாலை காப்புறுதி செய்யப்பட்டுள்ளதா? ஆம் எனில், தயவு செய்து காப்புறுதிக் கொள்கையின் ஒரு பிரதியை இணைக்கவும். | |
| 8. | **நெல் இருப்புத் தொகுத்தல் ஒரு பண்டகசாலையொன்றில், குதிரில் அல்லது கொள்கலனில் கொண்டு நடாத்தப்படின், அதன் குறித்துரைப்புகள்** | |
| | தொகை | |
| | களஞ்சியக் கொள்ளளவு (மெ.தொ.) | |
| | நிர்மாணிக்கப்பட்டிருப்பது (சீமெந்தினால்/தகட்டினால்/உலோகத்தினால்/ பொலித்தீனினால்/ப்ளாஸ்டிக்கினால்/ ஏனையவற்றினால் ( தயவு செய்து குறித்துரைக்க) | |
| 9. | உலர்த்தும் இயந்திரம் ஏதேனும் இருப்பின் அதன் கொள்ளளவு ( மெ.தொ.) | |
| 10. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறின் அதன் இலக்கம் மற்றும் செல்லுபடிக் காலப்பகுதியை வழங்குக (பிரதியொன்றை இணைக்க) | |
| 11. | ஏலவேயுள்ள நிறுக்கும் தராசுகளின் எண்ணிக்கையும் வகைகளும் | |
| | மின்சார வசதிகள் ( தயவு செய்து குறிப்பிடுக: இருக்கின்றன/இல்லை) | |
| | தண்ணீர் வசதிகள் (தயவு செய்து குறிப்பிடுக : இருக்கின்றன/இல்லை)<br>தீயணைப்புக் கருவிகள் ( தயவு செய்து குறிப்பிடுக: இருக்கின்றன/இல்லை) | |
| | நெல் இருப்புத் தொகுத்தலுக்காக வேறு ஏதேனும் உபகரணம் பயன்படுத்தப்படுமாயின் தயவு செய்து குறித்துரைக்க | |
| 12. | நெல் இருப்புத் தொகுத்தலுக்காக நிலையத்தின் பணியாட்டொகுதியினரின் விபரங்கள் | |

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் மற்றும் சரியானவையும் என இத்தால் நான் வெளிப்படுத்துகின்றேன்.

திகதி:..........

.........................................................................
விண்ணப்பக்காரரின் கையொப்பமும்
அலுவலக முத்திரையும்.

### அட்டவணை II

| ஆண்டொன்றுக்கு நெல் இருப்புத்தொகுத்தலுக்கான கொள்ளளவு ( மெ.தொ.) | வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் (ரூ.) |
|---|---|
| 100 வரை | 2,500.00 |
| 100 ஐ விஞ்சிய ஆனால் 500 ஐ விஞ்சாத | 5,000.00 |
| 500 ஐ விஞ்சிய ஆனால் 1,000 ஐ விஞ்சாத | 7,500.00 |
| 1,000 ஐ விஞ்சிய ஆனால் 5,000 ஐ விஞ்சாத | 10,000.00 |
| 5,000 ஐ விஞ்சிய ஆனால் 10,000 ஐ விஞ்சாத | 12,500.00 |
| 10.000 ஐ விஞ்சிய ஆனால் 50,000 ஐ விஞ்சாத | 15,000.00 |
| 50,000 ஐ விஞ்சிய ஆனால் 1,00,000 ஐ விஞ்சாத | 20,000.00 |
| 1,00,000 ஐ விஞ்சிய | 50,000.00 |

### அட்டவணை III

**1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நெற்சந்தைப்படுத்தல் சபைச் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்படும் நெல் இருப்புத் தொகுத்தலுக்கான அனுமதிப்பத்திரம்**

அனுமதிப்பத்திர இலக்கம்: ....................................

1. அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் பெயர் : ..........................................................................................
2. அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் முகவரி : ..........................................................................................
3. அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் தேசிய அடையாள அட்டை இலக்கம்: ...............................................................
4. நெல் இருப்புத்தொகுத்தல் கொண்டு நடாத்தப்படுமிடத்து அமைவிடத்தின் ( இடங்களின்) முகவரி:...........................................
5. களஞ்சியக் கொள்ளளவு: ..........................................................................................
6. அனுமதிப்பத்திரக் கட்டணம்: (ரூ.) : ..........................................................................................
7. அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலப்பகுதி:..........................................................................................
   (அ) ஆரம்ப திகதி:..........................................................................................
   (ஆ) முடிவடையும் திகதி: ..........................................................................................

விண்ணப்பகாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட ................ ஆந் திகதிய விண்ணப்பத்தையும் ..................... ஆந் திகதிய ................. ஆம் இலக்கக் கொடுப்பனவுப் பற்றுச்சீட்டையும் கவனத்துட்கொண்ட பின்னர், மேலே குறிப்பிடப்பட்ட இடங்களில் தொழிலொன்றாக நெல்லை இருப்புத்தொகுத்தலுக்காக இந்த அனுமதிப்பத்திரம் குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் வழங்கப்படுவதுடன் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் அத்தகைய நிபந்தனைகளுக்கிணங்க தொழிற்படுவதற்குப் பணிக்கப்பட்டவராகவுள்ளார்.

நெல் சந்தைப்படுத்தல் சபையின் அதிகாரத்தின் கீழ் வழங்கப்பட்டது.

.....................................................
வழங்கும் அலுவலர் பதவி முத்திரை.

திகதி:
முகவரி:
நெற்சந்தைப்படுத்தல் சபையில்.

### அட்டவணை IV

**அனுமதிப்பத்திர நியதிகள் மற்றும் நிபந்தனைகள்**

1. அனுமதிப்பத்திரம் வேறு எவரேனும் ஆளுக்கு கைமாற்றப்படுதலாகாதென்பதுடன் எவ்வாளுக்கு வழங்கப்பட்டுள்ளதோ அவ்வாள் தவிர்ந்த எவரேனும் ஆளின் நன்மைக்காகப் பயன்படுத்தலாகாது.

2. அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும் அவருடைய தொழில் இடத்தில் துலாம்பரமான இடத்தில் இச்சட்டத்தின் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தினை வெளிப்படுத்துதல் வேண்டும்.

3. அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் சபையின் முன்னங்கீகாரமின்றி இவ்வனுமதிப்பத்திரம் மூலம் மேவப்பட்ட தொழிலிலுள்ள ஏதேனும் அக்கறையை விற்றல், கைமாற்றுதல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல் அல்லது அத்தகைய தொழிலில் உரிமையாளின் அக்கறையொன்றை அத்தகைய வேறு ஆளுக்கு தேவைப்படுத்துவதன் மூலம் வேறு ஏவரேனும் ஆளுடன் அத் தொழில் தொடர்பில் ஏதேனும் உடன்படிக்கையில் ஈடுபடுதல் ஆகாது.

4. அனுமதிப்பத்திரம் தொலையும்பட்சத்தில், அதன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று தொலைந்தமையை உறுதிப்படுத்து கின்ற சத்தியப்பிரமாண ஆணையாளரொருவரினால் அல்லது சமாதான நீதிவானொருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் சத்தியக் கடதாசியொன்றின் சமர்ப்பணத்தின் மீதும் மற்றும் அரைவாசி அனுமதிப்பத்திரக் கட்டணக் கொடுப்பனவின் மீதும் சபையினால் வழங்கப்படுதல் வேண்டும்.

5. அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு இல்லாதொழிந்தவரான அல்லது தமது தொழிலிடத்தினை மாற்றுகின்றவரான அனுமதிப்பத்திரம் வைத்திருக்கின்ற ஒவ்வொருவரும் அந் நிகழ்வை சபைக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

6. தனியார் ஒருவருக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் இறப்பின் மீது இல்லாதொழிதல் வேண்டும். தனியாள் என்பது ஆட்கள் குழுவொன்றாக உள்ளவிடத்தான சந்தர்ப்பத்தில், அனுமதிப்பத்திரம் அவ்வாட்கள் குழுவின் கலைப்பின் மீது உடனடியாக இல்லாதொழிதல் வேண்டும்.

7. இவ்வனுமதிப்பத்திரம் தொடர்பிலான எல்லா அறிவித்தல்களும் அத்தகைய அறிவித்தல்கள் தொழில் இடத்திற்கு அப்போதைக்கு பொறுப்பாகவுள்ள ஆளுக்கு தபால் மூலம் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்பட்டிருப்பின் அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்டிருப்பின், அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு உரிய முறையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

8. அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் தாமதமின்றி நெல் இருப்பு தொகுப்பின் அவரது தொழிலை கொண்டு நடாத்துவதற்கு சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் காலத்துக்குக்காலம் அவருக்கு வழங்கப்படக்கூடிய எல்லா அறிவுறுத்தல்களுக்கும் அமைந்தொழுகுதல் வேண்டும். மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அறிவுறுத்தல்கள் ஏனைய நிகழ்வுகளுக்கிடையில் , இருப்புத்தொகுத்தல் கொண்டு நடாத்தப்படுகின்ற முறை மற்றும் அதற்கான இடைநேர்விளைவாக கருமங்கள் மற்றும் அவருடைய வளவுகளுக்கு ஏதேனும் பாகத்தின் மீள் கட்டமைப்பு அல்லது திருத்தம் என்பனவற்றை உள்ளடக்கின்றது.

9. அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் தமது தொழில் பற்றி முறையான பதிவேடுகள், இடாப்புகள் மற்றும் கணக்குப் புத்தகங்களைப் பேணுதல் வேண்டுமென்பதுடன் அவற்றை சபையின் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் சோதிக்கப்படுவதற்கு எல்லா நியாயமான நேரங்களிலும் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் அவசியமாகக்கூடியவாறான அதன் பிரதிகள் அல்லது பிரித்தெடுப்பு பகுதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அத்தகைய அலுவலரை வசதிப்படுத்துதல் வேண்டும்.

10. மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கைகள், இடாப்புகள் மற்றும் கணக்கு புத்தகங்களுக்கு மேலதிகமாக, அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் சபையின் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் காலத்துக்குக்காலம் தேவைப்படக்கூடியவாறான மேலதிக அறிக்கைகள், இடாப்புகள் மற்றும் கணக்குப் புத்தகங்களை பேணுதல் வேண்டுமென்பதுடன் அவற்றை அத்தகைய அலுவலரினால் சோதனைக்காக எல்லா நியாயமான நேரங்களிலும் சமர்ப்பித்தல் வேண்டும்.

11. அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதோ அதற்காக தொழில் இடத்தின் இருப்பு நிலை பற்றி முறையான அறிக்கைகள் மற்றும் புள்ளிவிபரங்களை சபையின் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் காலத்துக்குக்காலம் பணிக்கக்கூடியவாறான கால எல்லையினுள் சமர்ப்பித்தல் வேண்டும்.

12 அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் சபையின் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு தமது தொழில் வளாகத்தினுள் எல்லா நியாயமான நேரங்களிலும் பிரவேசிப்பதற்கும் வளாகங்களில் தமது தொழில் செயற்பாடுகளை அல்லது களஞ்சியப்படுத்தப்பட்ட நெல் பற்றி சோதனையிடுவதற்கும் அனுமதியளித்தல் வேண்டும். அவர் தமது தொழில் வளாகத்தில் கிடைக்கப்பெறத்தக்கவாறான இயைபான புத்தகங்கள் அல்லது ஆவணங்கள் அல்லது நெல் தொடர்பில் எவையேனும் தகவல்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

13. அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட தகவல்கள் பொய் அல்லது பிழை என கண்டுபிடிக்கப்பட்டால், இல்லாதாக்கப்படுவதற்கு உட்பட்டதாகும்.

EOG 01- 0001

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.